வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| அசல் மனு எண் | : | OS No.15/2021 |
| வழக்கு சாட்சி | : | DW 3 |
| நாள் | : | 21.07.2023. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**முதல் விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. நான் மாணவாளநகரில் குடியிருக்கிறேன். வாதி சம்பந்த் பிரதிவாதி பாண்டுரங்கள் தெரியும். அவர்களின் தாயார் நரசம்மாளை தெரியும். வாதசாஆ 2 நரசம்மாள் பாண்டுரங்கனுக்கு எழுதிய உயிலில் முதல் சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். இரண்டாவது சாட்சியாக எங்கள் பகுதியை சேர்ந்த ஜெயஸ்ரீரி என்பர் கையொப்பம் செய்துள்ளார். நரசம்மாள் சுயநினைவுடனும் உடல் மற்றும் ஆரோக்கியத்துடனும் வாதசாஆ 2 உயிலை எழுதி கொடுத்தார்.

குறுக்கு விசாரணை

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். முதலில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். தற்போது செய்யவில்லை. நான் திருவள்ளூரில் உள்ள வழக்கறிஞர் சீனிவாசன் என்பவரிடம் தட்டச்சராக பணி செய்தேன். 1996வரை அவரிடம் வேலை செய்தேன். 1996க்கு பிறகு நான் வேறு எங்கும் வேலை செய்யவில்லை. நரசம்மாள் லோகநாதன் என்கிற கணக்குபிள்ளையுடன் எங்கள் வீட்டு வாசலில் வந்து உட்காருவார் அப்படிதான் எங்களுக்கு பழக்கம். மாணவாள நகர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே எனது வீடு உள்ளது. ஆவண எழுத்தர் திரு.ராஜகோபல் என்பவர் உயிலை தயார் செய்தார். உயிலில் உள்ள தகவல்களை லோகநாதன் கொடுத்தார். தகவல் கொடுத்தது மற்றும் உயில்

தயார் செய்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியும். உயிலில் அடிப்படை விவரங்கள் என்ன இருக்க வேண்டும் என்று எனக்கு தெரியும். நான் மணவாள நகரில் ஆவண எழுத்தருக்கு உதவியாக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். இந்த உயில் எழுதப்பட்ட சமயத்தில் நான் ஆவண எழுத்தரின் உதவியாளராக இருந்தேன் என்றால் சரிதான். ஜெயந்தி என்பவர் நான் குடியிருக்கும் வீட்டிற்க்கு பக்கத்தில் குடியிருக்கிறார். நரசம்மாளுக்கு நான் நண்பர். உயில் எழுதிய சமயத்தில் அவருக்கு வயது 60 இருக்கும். லோகநாதன் ஏன் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று எனக்கு தெரியாது. பொதுவாக ஆவணங்களை ஊரில் உள்ள கணக்காளர் எழுதுவார் என்றால் சரிதான். உயில் எழுதும் சமயத்தில் லோகநாதன் உடன் இருந்தார். உயிலில் அவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை மற்றும் ஆவணத்தை தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நரசம்மாள் உயிலில் இரண்டு மகன்கள் இருப்பதாக கூறி ஏன் ஒரு மகனுக்கு மட்டும் உயில் எழுதிவைத்தார் என்ற காரணத்தை உயிலில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏன் என்று அவரிடம் கேட்டானா என்றால் கேட்டேன் ஒரு மகன் தன்னை சரியாக பார்த்துகொள்வதாகவும் அதனால் தான் உயில் எழுதியதாகவும் கூறினார். உயில் எழுதும்போது வாதி சம்பந்த் மற்றும் பிரதிவாதி பாண்டுரங்கள் இருவரும் இருந்தார்கள். சம்பந்த் ஏன் சாட்சி கையொப்பம் போடவில்லை என்று நான் கேட்கவில்லை அவர்களுக்குள் சண்டை இருக்கும் என்று விட்டுவிட்டேன். வாதசாஆ 2 உயிலை எழுதம்போது சம்பத் மற்றும் லோகநாதன் உடன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே அவர்கள் இருவரும் இருந்திருந்தால் அவர்கள் தான் சாட்சி கையொப்பம் இட்டுயிருப்பார்கள் என்றாலும் சம்மந்தப்படாத நானும் ஜெயந்தியும் சாட்சி கையொப்பம் இட்டுருக்கமாட்டோம் என்றால் சரியல்ல.